ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எழுத்தாளர் எம்.ஏ.சுசீலாவின் சிறுகதைகளில் தொன்ம மீட்டுருவாக்கங்கள்

**இரா. குமரகுருபரன் & முனைவர் சு.அரங்கநாதன்**

**தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,**

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,**

**577 அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600015.**

6

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ப் பேராசிரியர் எம் ஏ.சுசீலா சிறந்த எழுத்தாளர்; மொழிபெயர்ப்பாளர். “மானிடவர்க்கென்று பேச்சுப்படில்…”, “புதிய பிரவேசங்கள்,” “தேவந்தி” ஆகிய மூன்று சிறுகதைகள் இந்த ஆய்வுக் கட்டுரையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இக்கதைகள் அனைத்தும் தொன்ம மீட்டுருவாக்கங்கள் கொண்ட பெண்ணிய எழுத்து ஆகும்.

“மானிடவர்க்கென்று பேச்சுப்படில்…” சிறுகதையில் தனது வளர்ப்பு மகள் கோதை நாச்சியார் என்னும் ஆண்டாளுக்கு சரியான வகையில் வரன் அமையப் பெறவில்லை என்று பெரியாழ்வார் புலம்பியபடி சடகோபரிடம் திருமண வரன் ஏற்பாடு செய்ய வேண்டுகிறார். கோதையின் குலப் பிறப்பு இங்கு கேள்விக்குள்ளாவதால் சிக்கல் எழுகிறது.

“புதிய பிரவேசங்கள்” சிறுகதையானது சீதையின் கற்பை நிரூபிக்க இராமன் அக்கினிப் பிரவேசம் செய்யச் சொல்லும் சூழ்ச்சியை அறிந்த சீதை, தனக்காகவும் எதிர் காலச் சீதைகளுக்காகவும் சிதையேற்றம் புக மறுத்து அதற்கான நியாயத்தையும் உரைக்கிறாள்.

“தேவந்தி” சிறுகதையில்,

கெட்ட கனவை தேவந்தியிடம் பகிரும் கண்ணகியிடம், தேவந்தி தனிமையில் வாழும் தனது வாழ்க்கை ரகசியத்தை உடைக்கிறாள். தேவந்தி நோன்பு மாதிரியான செயல்களில் மடைமாற்றம் காண்பதாக நடித்துவருவதாகவும், இல்லற வாழ்வில் மனைவிக்கான கணவன் கடமை என்பதும் உண்டுதானே என்ற வினா எழுப்பியபடி, தேடலில் இருப்பதாகவும் எடுத்துரைக்கிறாள்.

இந்த மூன்று சிறுகதைகளிலும் தொன்ம மீட்டுருவாக்கம் என்பதை மிகவும் செறிவுடன் காட்சிப் படுத்தியுள்ளார் சுசீலா.

தொன்ம மீட்டுருவாக்கம் விளக்கம் மற்றும் வகைமை விளக்கப் பட்டுள்ளது.

எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன், ‘பெண்ணியம்’ இரா. பிரேமா, எழுத்தாளர் பாவண்ணன் ஆகியோர் மேற்கோள்களைக் கொண்டதாக இந்த ஆய்வுக் கட்டுரை விளங்குகிறது. “தேவந்தி” என்னும் வடக்கு வாசல் வெளியீடான சுசீலாவின் சிறுகதைத் தொகுப்பு இதன் மூலநூலாக உதவியது.

**திறவுச்சொற்கள்**

பெண் எழுத்து - தொன்ம மீட்டுருவாக்கம் -

மானிடவர்க்கென்று பேச்சுப்படில் - புதிய பிரவேசங்கள் - தேவந்தி.

1. **முன்னுரை**

1.1. எம்.ஏ.சுசீலா மதுரை பாத்திமா மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர், துணை முதல்வர் (இரண்டு ஆண்டுகள்) என்ற பொறுப்புகளில் (1970-2006) பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
1.2. உருசிய எழுத்தாளர் பியோதர் தஸ்தயெவ்ஸ்கியின் “குற்றமும் தண்டனையும்”, “அசடன்” ஆகிய புதினங்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.
1.3. இந்த ஆய்வுக் கட்டுரையில் இடம்பெறும் “மானிடவர்க்கென்று பேச்சுப்படில்…”, “புதிய பிரவேசங்கள்” “தேவந்தி” ஆகிய மூன்று சிறுகதைகளும் எம்.ஏ.சுசீலா எழுதி, தில்லி ‘வடக்கு வாசல்’ வெளியிட்ட “தேவந்தி” சிறுகதைத் தொகுப்பில் அடங்கியவை.
1.4. இவரது சிறுகதைகளில் பெண்ணியக் கூறுகள் அதிகம் எதிரொலிக்கும்.

2. **தொன்ம மீட்டுருவாக்கங்கள்**

2.1. பன்முக நோக்கில் பெண்ணியம் என்னும் தமது கட்டுரையில் பேராசிரியர் இரா. பிரேமா அவர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறார்:

‘மிதோஸ்’ (mythos) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானது ‘myth’ என்ற ஆங்கில சொல்லாகும். இச் சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல் ‘தொன்மம்’ என்பதாகும். இது ‘பழையது’ என்ற பொருளுடையது. தொன்மங்கள் மதச் சம்பந்தமுடையதாக அமைந்திருக்கும்; காரண காரிய தொடர்புக்கு அப்பாற்பட்ட தாகவும் இயற்கை இகந்ததாகவும் (supernatural), கதை சார்ந்ததாகவும் காணப்படுகின்றன.

இவை ஆதி சமூகத்தில் சில ரகசியங்களை/ புனிதம் என்று நம்பப் படுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மேலும் தொன்மங்கள் இலக்கிய காலத்திற்கு முற்பட்ட வாய்மொழிச் சமூகத்தினது என்று நம்பப் படுகின்றன. அவை தாம் தோன்றிய சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதும் பேணுவதும் ஆகும். தொன்மங்கள் தொடர்ந்து அழியாது நின்று, அந்தந்தக் கால மக்களால் போற்றப்பட்டு வந்திருக்கின்றன.

தொன்மங்கள் தனி மனிதனால் உருவாக்கப்பட்டவை அல்ல. பலரால் பல காலகட்டங்களில் உருவாக்கம் பெற்றவைகளாகும். எனவே, அவற்றில் மாறுபட்ட/ முரண்பட்ட கூற்றுக்கள் இடம் பெறுவதும் உண்டு. தொன்மங்கள் எதிரெதிர் நிலைப்பாடுகளைப் பேணுவன. மனிதன் இரண்டான அந்த முதற் காலத்திலேயே எல்லாம் இரண்டாகி விட்டன. ஆண்டான் தோன்றிய அதே காலத்தில் அடிமையும் தோன்றி விட்டான்.

தெய்வம் தோன்றிய காலத்திலேயே பேய்களும் பிறப்பெடுத்தன. சொர்க்கம் x நரகம், ஆண் x பெண், இளமை x முதுமை, வெளிச்சம் xஇருட்டு, பணக்காரன் x ஏழை என்பன போன்ற எதிரெதிர் நிலைப்பாடுகளை வலியுறுத்துவனவாகவும் தொன்மங்கள் அமைகின்றன…

காலந்தோறும் படைப்பாளிகள் தொன்மங்களை நவீன சிந்தனைகளுக்கேற்ப மீட்டுருவாக்கம் செய்துள்ளனர். மார்க்சிய சிந்தனையாளர்கள், திராவிட/ பகுத்தறிவு சிந்தனையாளர்கள்,

பெண்ணியச் சிந்தனையாளர்கள், தலித்திய சிந்தனையாளர்கள் - தங்கள் சிந்தனைகளுக்கேற்ப தொன்மக் கதைகளை, பாத்திரங்களை மீட்டுருவாக்கம் செய்கின்றபொழுது, அடிப்படைக் கதை மாறுவதில்லை.ஆனால், பாத்திரங்களின் சிந்தனை மாறுபட்டிருக்கும்." ( இரா . பிரேமா, பக்.781-782).

2.2. இந்த அடிப்படையில் சுசீலா எழுதிய மூன்று கதைகளை ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளலாம்.

**3. "மானிடவர்க்கென்று பேச்சுப் படில்…"**

**(மங்கையர் மலர், மே, 1985)**

3.1. பெரியாழ்வார், அவரது மகள் கோதை நாச்சியார், பாசுரங்களை ஏடுகளில் படியெடுக்கும் இளைஞன் நம்பி என்ற மூன்று கதைமாந்தர்களை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள கதை.

அம்புலி காட்டிச் சோறூட்டி, சப்பாணி கொட்டித் தளர்நடை பயின்று, சிற்றாடை கட்டிச் சிரித்து நங்கையாய் பெண்மை அரும்பு கட்டி மலரும் ஆண்டாள் தன் வயதுத் தோழிகளுடன் ஆற்றுமண் கொழித்து சிற்றில் அமைத்தும் அரங்கனுக்காக மணப் பொடி இடித்தும் மாலை தொடுத்தும் வளர்வதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறார் பெரியாழ்வார்.

தமது அன்றாடப் பணிவிடைகளை முடித்து விட்டு அகலும் முன், கோதைக்கு மணம் முடித்து வைக்கும் கடமையை நினைவூட்டிச் செல்கிறாள் ஆண்டாளின் செவிலித்தாய் மாணிக்கவல்லி.

வில்லிபுத்தூரில் விரைவாகப் பரவும் மணமகன் தேடுதல் செய்தியால் தடிதுடித்துப்போன கோதை, 'திருவரங்கனே உனது மணாளன்' என்று சொல்லிச் சொல்லி வளர்த்த தந்தையிடம் கேள்வி கேட்க, 'திருமகளின் அவதாரமான உன்னைப் போல் மாயக் கண்ணனும் எங்காவது பிறந்திருக்காமலா போவான்?' என்று சமாதானம் செய்து சம்மதிக்க வைக்க முயல்கிறார். கண்ணனை அடைவதற்கு உடலை வருத்தும் பாவை நோன்பு நோற்கிறாள். இருபத்தொன்பது நாட்கள் முடிந்து முப்பதாவது நாளில் கண்ணன் தரிசனத்தை எதிர்நோக்கியபடி காத்திருக்கிறாள்.

தன் மகளின் தகுதிக்கேற்ற வரன் கிட்டாததே இதற்கான காரணம் என்று தாமாகவே கற்பித்துக் கொண்டிருந்ததைத் தாண்டியுள்ள ஒன்றினை அறிய, தமது இளமைக் காலம் முதலான நண்பரும் அரசவைச் செல்வாக்கு மிக்க சடகோபரின் வழியாக வரன் அமையும் என்று எதிர்பார்த்து வினவ,

> "… ஆண்டாளின் அழகுக்கும், பொலிவுக்கும், அறிவுக்கும், அன்புக்கும்… இந்த அற்ப மானுடர்கள் யாரும் பக்கத்தில் நெருங்கக் கூட முடியாது சுவாமி!... ஆனாலும்… ஐயோ… அதை என் வாயாலும் எப்படிச் சொல்வேன் சுவாமி?... ஆண்டாளின் பிறப்பை எண்ணிப் பின்வாங்கிப் போகிறார்களே இந்தப் பேதை ஜனங்கள்…?" (சுசீலா, ப. 102)

இதைக் கேட்ட பெரியாழ்வார் அதிர்ச்சியில் உறைந்து போகிறார்!

3.2. இப்போதுதான் சுசீலா தமது பார்வையை முன்வைக்கிறார்:

"பிறப்பு…! பிறப்பு…! ஆழ்வாரின் மூளையில் ஆயிரம் மின்னல்கள் ஒரேயடியாய் வெட்டியடிக்க… எங்கிருந்தோ விழுகிற பேரிடி ஒன்று, அவரது இதயத்தையே இருட்டடிப்புச் செய்து விட்டுப் போகிறது. திருமகளே இந்த மண்ணுக்கு வந்த மாட்சியாய்… அவதரிப்பாய்த் துளசிச் செடியின் அடியிலே கிடந்த ஆண்டாள்… அவள் பிறப்பு… இத்தனை அற்பமாகிவிட்டதா இந்தக் கலக மானுடப்

பூச்சிகளுக்கு…? ஆனால்…ஆனால் … அந்த மாண்புகளெல்லாம், உன்னதங்களெல்லாம் அவராகக் கற்பித்துக் கொண்டவைதாமே!... அவராக நியமித்துக கொண்டு ஊருக்குச் சொன்னவைதாமே! உண்மையிலே ஊராருக்கு வேண்டியதெல்லாம்… சாதி, குலம், கோத்திரம்…! அனைத்துக்கும் மேலாக, முறையான ஒரு வம்சாவளி!... அதை ஒழுங்காய்ச் சொல்ல முடியாதபோது, ஆயிரம் ஆயிரமாய் அவள் பாயிரம் பாடித்தான் என்ன பயன்? பாதரசமாய் அவள் அழகு ஒளிவிட்டுத்தான் என்ன பயன்?"

(மேலது,
ப. 102-103).

இதையொன்றும் அறியாத ஆண்டாள்,

' இன்று புதிதாய் என்ன கற்றுக் கொண்டாய், நம்பி? ' என்று நம்பியிடம் வினவியபடி நோன்புப் பொலிவில் மிளிரும் கோதை, துயில் கொண்ட பெரியாழ்வாரின் பொலிவிழந்த தோற்றத்தைக் கண்டு அதிர்ச்சியுடன் எழுப்புகிறாள். இயல்பாகவே பொலிந்து கொண்டிருக்கிற அவளது அழகுத் தோற்றம் நோன்பினால் மேலும் புடம் போட்டிருப்பதைக் கண்டதால் பாசம் கலந்த விம்மிதத்தால் பொங்கும் அவர் கண்கள் பனிக்கின்றன.

"நீதான் எத்தனை பெரிய தீர்க்கதரிசியம்மா?... இந்த அற்ப மானுடச் சிறுமைகளை உணர்ந்துதான், இவர்கள் யாரோடும் இணைத்துப் பேசப்படுவதில் கூட உனக்கு விருப்பமில்லை என்று அன்றே சொன்னாயோ…? உனக்கு நிகரில்லாத ஒரு மனித மந்தையில், உனக்கு ஏற்றபடி ஆள் தேடுகிற பாவத்தைச் செய்ததனால், நானே உன் அற்புதத்தை அற்பமாக்கி விட்டேனோ…? தன் மதிப்புள்ள ஒரு மனிதப் பிறவியாக மட்டுமே ஒரு பெண்ணை மதித்து ஏற்கத் தெரியாதவர்கள் வாழும் மண்ணில்… அப்படிப்பட்ட பெண் ஜன்மங்களுக்கு ஏற்ற வரன், அந்த ஆண்டவனைத் தவிர வேறு யாராகத்தான் இருக்க முடியும்?"

" மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்…"

என்ற நாச்சியார் திருமொழிப் பாடலை அவரது உதடுகள் மெல்ல இசைக்க… ஆண்டாளின் கண்கள் மகிழ்வில் மின்னுகின்றன.( மேலது, ப. 103)

என்று நிறைவு செய்கிறார் சுசீலா.

3.3. பெரியாழ்வாரின் இந்த இயலாத்தன்மையானது, இயல்பு வாழ்விலிருந்து தப்பிக்கும் உளவியல் மனநிலை என்பதை நாம் அறிவியல் வளர்ச்சி மிக்க காலகட்டத்தில் உணரமுயல்கின்றோம்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பெரியாழ்வார் அப்படித்தான் சமாதானம் கொள்ள இயலும்!

வளர்ப்பு மகள் அரங்கனையே நினைத்து அரங்கனுக்கான மாலையை தானே சூடிக் கொண்டு, பின்னர் அவனுக்குப் படைத்தல், நோன்பு நோற்றல் விவரணைகள், பெரியாழ்வார் கனவில் அரங்கன் வந்து அருளுதல் என்று எல்லோருக்கும் தெரிந்த கதைகளிலிருந்து மாற்றி யோசிக்கிறார்! குலப் பிறப்பு என்னும் சிக்கலான கேள்வியை முன்எழுப்பும் மறுவாசிப்பு இதுவாகும்.

3.4. எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவர். அவரது நோக்கில் ஆண்டாளின் பிறப்பு குறித்துப் பார்க்கும்போது,

ஆண்டாளின் பிறப்பே, சீதை எனும் காவிய நாயகியின் பிறப்பைப் போன்றே மருமமாக இருக்கிறது…

> ஒரு பெண் மகவு தாயால் அநாதையாக விடப்பட வேண்டுமென்றால், தந்தை என்று முறையாகச் சொல்லிக் கொள்ள, திருமணம் இல்லாத நிலையில் ஒருத்திக்குப் பிறந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அந்த தாய்-மகள் தொடர்பு, சமுதாயம் ஒப்புக் கொள்ளாத நிலை என்பது வெளிப்படை. இந்த உண்மை திருவவதாரம் என்ற மருமத்தில் மறைக்கப்பட்டிருக்கிறது.
>
> (ராஜம் கிருஷ்ணன், ப. 99)

3.5. நிலவுடைமை சமூகம் மக்களை 'குலப் பெருமை' என்ற வகையில் பிரித்துப் புனைந்ததுவே இதற்கான காரணம் என்று அறிய வருகின்றோம். சாதியம் எவ்வாறு குலப்பெருமையிலிருந்து முகிழ்த்து, சாத்தானாகப் பேருரு எடுத்துள்ளது என்பதை நாம் உணர இயலும். இதைத்தான் இக்கதையில் கோடு காட்டுகிறார் சுசீலா!

3.6. இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே, சென்னை மாநகரத்தில் காதலித்துக் கைப்பிடித்த மணமகனை ஆணவக்கொலை செய்த மணமகள் குடும்பத்தார் செய்தி தொலைக்காட்சிகளில் குற்றப் புலனாய்வுக் கதையாக ஓடிக் கொண்டிருக்கிறது!

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற இருபத்தியோராம் நூற்றாண்டிலேயே, உலகளாவிய மாநகரங்களில் ஒன்றான, சென்னையில் நிகழ்ந்த கொடுமையான வன்முறை என்னும்போது, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டர் பிரான், விஷ்ணு சித்தர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்ட பெரியாழ்வார் காலகட்டம் இங்கு நோக்கத்தக்கது.

3.7. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் திருப்பாணாழ்வாருக்கும், 'திருநாளைப் போவாரான' நந்தனாருக்கும் கூட இது நிகழ்ந்தது.

கி.பி. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ அருளாளர் இராமாநுசரும் அனைத்து சாதியினரையும் 'விசிஷ்டாத்வைதம்' என்னும் வைணவ சம்பிரதாயத்தில் இணைத்து முன்னேற்றம் காண விரும்பினார். இதன்படி, 'மோட்சம்' என்பது தனிநபர் தெய்வீக நிலையை அடைவது அல்ல; மாறாக, அனைத்து வரம்புகளை அழிப்பதுதான் என்று எடுத்துரைத்தார்.

3.8. வள்ளலார் இராமலிங்க அடிகளார் சைவ அருளாளராக இருந்து 'அருட்பெருஞ்சோதியே தனிப்பெருங்கருணை' என்று அனைத்துயிருக்கும் பொதுவான, கருணையையும் பசிப்பிணி நீக்கும் பண்பினையும் முன் நிறுத்தினார்.

3.9. இந்நிலையில், கன்னித்தாய்-குழந்தை- தூய யோவான்-தேவதை கொண்ட ஓவியமான 'பாறைக் கன்னி' (The Virgin of the Rocks ), 'மோனலிசா' (Mona Lisa), 'இறுதி இரவுணவு' (The Last Supper) உள்ளிட்ட தலைசிறந்த ஓவியங்களைப் படைத்த உன்னத மறுமலர்ச்சிக்கால இத்தாலிய ஓவியர், கணிதமேதை லியானர்டோ-டா-வின்சி (1452-1519), ஒரு 'நோட்டரி' இத்தாலிய அரசு அதிகாரிக்கும் உழுகுடிப் பெண்மணிக்கும் முறைதவறிப் பிறந்தவர் என்னும் வரலாற்றை குற்றமற

ஆவணப் படுத்துகிறது மேலையப் பண்பாடு! பிற்காலத்தில் தேவாலய ஓவியங்கள் பலவற்றைத் தீட்ட அவரது குலப் பிறப்பு தடையாக இல்லை என்பதை இங்கு அழுத்தமாகச் சொல்ல வேண்டும். அவரது கலைக்காகவே அவர் பெரிதும் மதிக்கப்பட்டார்.

**4. "புதிய பிரவேசங்கள்" (கலைமகள், நவம்பர் 1988)**

4.1. இலங்கைப் பட்டினத்தில் இராவணனிடம் சிறைப்பட்ட சீதையை மீட்கப் போரிட்டு இராவணனை வென்ற இராமன், 'மக்கள் நலனுக்காக' என்று கூறி சீதையை அக்கினிப்பிரவேசம் செய்ப்பித்து கற்புக்கரசி என்று அவளை நிரூபித்துக் காட்டச்சொன்ன சீதை தீக்குளித்த இராமாயண இதிகாசக்கதையை நாம் அறிவோம்.

இதை மறுவாசிப்பு செய்த கதைதான் சுசீலா எழுதிய 'புதிய பிரவேசங்கள்' சிறுகதை.

> புகை படிந்த ஓவியமாய் தூசு படிந்த சிற்பமாய்... மாற்றான் மனையிலே சிறையிலிருந்த சீதை இப்போது துலக்கித் துடைத்த குத்துவிளக்காய் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறாள். துணைவனின் அருகே வந்ததும் மெள்ளத் தலைநிமிர்த்தி இதழ்க் கடையில் அவள் அரும்ப விடும் புன்னகை, அவனிடத்தில் ஆயிரம் செய்திகளை மௌன அஞ்சல் செய்கிறது. (பக் 156, 157)

என்று கதையின் தொடக்கத்திலேயே இராமனை எதிர்கொள்ளவிருக்கும் சீதையின் நுட்பமான மனநிலையை வெளிப்படுத்திகிறார் சுசீலா. ஆனால் இராமனின் நிலை என்ன?

> "இதை நான் செய்துதானாக வேண்டுமா...? ஆம்...வேறு வழியில்லை!
> மக்கள் நலனுக்காக...என் நலனுக்காக... சீதையின் நலனுக்காகவும் கூட! அரச நீதிகள்... காருண்யம் பார்ப்பதில்லை!"
> (பக். 155)

என்று தனக்குள் உரையாடிக் கொண்டிருக்கிறான் இராமன்.

> 'அரக்கனாலேயும் கூட அழிக்கப்பட முடியாத உன் மானத்தைச் சிதைப்பதற்கு, உன் உயிர்காவலனே ஆயத்தமாய்... இதோ... காத்திருக்கிறேனடி பேதைப் பெண்ணே! உன் அனுமதியின்றி உன்னைக் கரம் பற்ற அந்த இராவணன் பயந்தான். நானோ... ஊரே கூடியிருக்க, என் மனைவியின் முந்தானையை சரேலெனக் கிழிக்கும் மாபாதகத்தைச் செய்யப் போகிறேன்! இங்கே உண்மையில் இராவணன் யார்?' (ப. 157)

என்று சுசீலா எழுதிச் செல்லும்போது நிமிர்ந்து கலவரத்துடனும், கவனத்துடனும் கதையைத் தொடர்கின்றோம்.

" வைதேகி! விலகி நில்! என்னைத் தீண்டாதே!" என்று இராமன் உரக்கச் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனவளாய்ச் சுற்றுமுற்றும் பார்க்கும் சீதை,

> யாருடைய குரல் இது? இந்தக் கோர வார்த்தைகளின் ஜனிப்பு, எந்த உள்ளத்திலிருந்து நேர்ந்திருக்கிறது? இராவண வதம், இன்னும் நிகழ்ந்தாகவில்லையா என்ன? அந்த அசுர மாயை, இன்னும் கூடவா எஞ்சியிருக்கிறது? இது என் கணவன்தானா அல்லது மாயா ஜனகனைச் சிருஷ்டித்த அரக்கன், தன் சூழ்ச்சியால் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் மாயா இராமனோ இவன்...? (ப.157)

என்று மருள்கிறாள்.

> “ அயலான் ஊரில், அவன் அமைத்துக் கொடுத்த உல்லாசச் சோலையில், தன்னை மறந்து, தன் நிலையை மறந்து களித்திருந்தவளுக்குக் கணவனுடன் கூடிவாழ என்ன தகுதி இருக்கிறது? நீ இங்கே நடத்தியிருக்கிற வாழ்க்கைக்கு, இப்போது நீ புனைந்துள்ள கோலமே சாட்சியம் கூறிக் கொண்டிருக்கிறதே?” (ப.158)

என்று அவன் சொன்னபோதுதான், இராமனின் சூழ்ச்சி அவளுக்குப் புரியத் தொடங்குகிறது. ( தவக்கோலத்தில் இருந்த சீதையை ஒப்பனையுடன் வரச் சொன்னதாக திரிசடை வழியாகச் செய்த அவனது சூழ்ச்சி!)

‘சொல்லின் செல்வனான வாயுபுத்திரன் அனுமன் இராமனிடம் கூறிய தனது தவக் கோலமும் அவனது வாய்மையுமல்லவா இங்கே சந்தேக ஆகுதிக்கு இரையாகிக் கொண்டிருக்கிறது?’ என்றும் சீதை புலம்புகிறாள்.

> “அயலவனின் ஆதிக்கத்தில் மனைவியை விட்டு வைத்தால், அது எனக்குப் பழி தரும் என்பதனாலேயே இந்த முயற்சியை மேற்கொண்டேன். என் கடமை முடிந்தது! இனி உனக்கு மீட்சி, சாவு ஒன்றிலேதான் கிட்டும்!... உனக்குப் பாவமன்னிப்புத் தந்து உன்னை பரிசுத்தமாக்கப் போவது அந்த மரணம் ஒன்றுதான்!...”

என்று தொடர்ந்து சொற்களால் வதைப் படுத்தி, சீதைக்குச் ‘சிதை ஆயத்தமாகட்டும்’ என்று தம்பி லட்சுமணனிடம் உத்தரவிடுகிறான்!

சீதையும் கரம் கூப்பி, கண்களை மூடியபடி, மும்முறை அக்கினியை வலம் வந்து, தீக்கடவுளை வணங்கித் தொழுது, இராமனின் பாதங்களில் ஒரு முறை வீழ்ந்து எழுகிறாள்.

> “தங்கள் ஆணையை இம்முறை என்னால் நிறைவேற்ற முடியவில்லை சுவாமி! என்னைத் தாங்கள் மன்னித்து அருள வேண்டும்!”
>
> இனிவரும் காலத்தில்..., தங்களின் இந்தச் செயலை முன்னோடியாய்க் கொள்ளும் இந்த மண்ணுலக மனிதர்கள், தவறே செய்யாத ஒரு பெண் மீது களங்கம் சுமத்தி கழுவேற்றத் துடிக்கும் போது ... மனைவி மீது சிறியதொரு சந்தேகம் அடிமன ஆழத்தில் எழுந்தாலும் அதைக் காரணமாக்கி அவளை ஆட்டிப் படைக்க ஆசை கொள்ளும்போது... அங்கும் தங்களது பெயர் தவறாக பயன்பட்டு விடக்கூடிய அபாயம் இருக்கிறதே... அப்போது... பாவப் பட்ட அந்த மானுடச் சீதைகளின் நிலை?
>
> என் நிலையில்... இந்தத் தீக்குளிப்புக்கு ஒரு நொடியில் நான் உடன்பட்டு விடமுடியும்... ஆனால், அக்கினிப்பிரவேசம் செய்து என் பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதை விட அதைச் செய்யாமலிருப்பதன் மூலம் எதிர்காலத்தில் என் பெயரால் எரியூட்டப்படும் என் சகோதரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றே ஆசைப் படுகிறேன் நான்! தங்களின் செயல், தவறான ஒரு முன்னுதாரணமாகி வரலாற்றின் பக்கங்களைக் கறைப்படுத்தி விடக்கூடாதே என்ற ஆதங்கத்தினாலேயே தயங்கி நிற்கிறேன் நான்!” (பக்.160-161)

என்று நிதானமாக விடை பகிர்கிறாள் சீதை. சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வெல்லும் சாதுரியத்தைக் கைக்கொண்டு விட்டாள் அவள்!

மனமும் உடலும் களைத்துப் போய்ப் பேச்சை நிறுத்திய அந்தப் பெண்குல திலகத்தை ஆதரவோடு நெருங்கி அவளது குழற்கற்றையை வாஞ்சையோடு நீவி விடுகிறான் இராமன். அவள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவன் எடுத்துவிட்ட முடிவைப் புரிந்து கொண்ட பூரிப்பில், … அங்கே கூடியுள்ளோரின் நெஞ்சங்கள் அமைதியால் நிறைகின்றன.

(பக். 161)

என்று கதை நிறைவடைகிறது.

4.2. ‘தொன்ம மீட்டுருவாக்கம் என்பதில் அடிப்படைக் கதை மாறுவதில்லை; ஆனால் பாத்திரங்களின் சிந்தனை மாறுபட்டிருக்கும்’ என்ற கோட்பாடு இதில் வெளிப்பட்டுள்ளது. சிந்தனையோட்டங்கள் காலவோட்டத்திற்கு ஏற்றாற்போல் செழுமையடைகின்றன.

4.3. இது குறித்து ராஜம் கிருஷ்ணன் பார்வையை அணுகலாம்:

இராமகாதையின் முக்கியத்துவமே பெண்ணுக்குக் கற்பு என்றதோர் அணிகலத்தை நெறியாக்குவதில் மையம் கொண்டிருக்கிறது. பளிங்கு போன்ற கண்ணாடித்துண்டை மெழுகு போல் அனலில் காட்டி வளைப்பது போல், பெண்ணை ஆண் நாயகச் சமுதாயத்துக்கு உகந்தவளாக்கும் நெறியாக ‘கற்பியல்’ முழுமையாக்கப் படுகிறது.

(ராஜம் கிருஷ்ணன், ப.44)

உழுநிலத்தில் அவளைக் (சீதையை) கண்டெடுத்த சனகர், மகளாக வளர்த்தார். அரசிளங்குமரியாகவே வளர்க்கப் பட்டாலும், ஒரு தாயின் வயிற்றில் பிறந்த விவரங்கள் தெரியாமல் இருக்கையில், அவளுக்குத் தக்கதொரு கணவரை எப்படி தேடித் தேர்ந்தெடுப்பார்?...பின்னரே வில்லை வளைத்து நாணேற்றுபவருக்கு அவள் மாலையிடுவாள் என்று முடிவு செய்தார்…’தாய் தகப்பன் தெரியாத பெண்ணை எவன் கட்டுவான்?’... இந்த நியதி இன்றும் நிலைத்திருக்கிறது…

இராவணன் அவளைப் பலவந்தம் செய்யாமலேயே அச்சுறுத்திப் பணியவைக்க முயலுகிறான். மெல்லியளான சீதை, ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டு, அதற்குச் சமமாக அவனை மதித்துப் பேசுவதாக விவரிக்கப் படுகிறது.

இது சோக சிகரம் தான்.

இத்தகைய நாயகியை இராமன் சந்தேகப்பட்டானே?

அப்போதைய சீதையின் மனோநிலை யாது? அது சோக சிகரமில்லையா? அக்கினியில் புகுந்து தன் தூய்மையை நிரூபித்த பின்னரும், குடிமக்கள் சந்தேகப் படுகிறார்கள் என்று, பூரண கருப்பிணியான மனைவியைக் கானகத்துக்கு அனுப்பித் தன் அரச குல நியாயத்தை நிலைநாட்டிக் கொள்கிறானே, அது சோகத்தின் நெடுமுடியல்லவோ?...

இன்னும், அவன் உருவாகவே இரண்டு பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டு உணர்ந்த பின்னரும், முனிவர், அவர்கள் சீதையின் புதல்வர்கள், அவள் உத்தமி என்று நற்சான்று அளித்த பின்னரும், அந்த ஆண் ஆதிக்கம் கனிந்து கொடுக்கவில்லை…

அவள் எப்படி இன்னும் தன் உள்ளத்தை நிரூபிப்பாள்?

பூமி பிளந்தது; அவள் தாயின் மடியில் ஐக்கியமானாள்.

ஆணாதிக்கம் பெண்ணுக்குப் பூட்டிய விலக்கமுடியாத தளையாக இன்றும் இந்த நெறி இறுக்கிக் கொண்டிருக்கிறது…

இராமாயணத்தில் பூரணமான கற்பு நெறி, புளுகுப் புராணங்களில், எத்தனை நூற்றாண்டுகள் தேய்ந்த போதிலும், புதிய வடிவங்களில் அவளை மட்டும் பிணிக்கும் நெறியாக வலிமை பெற்றிருக்கிறது. தாயாகி நின்ற பெண், வெறும் உடைமைப் பொருளாக, களங்கத்தைக் குத்தி வீசியெறியப்படும் நிலைக்கு இழிந்து போனாள்…

இந்தக் காவியநாயகனின் மீது எந்த ஓர் ஆணாதிக்கப் பழி நிழலும் விழக்கூடாது என்று, சீதை தானே வலிய வந்து காட்டுக்குப் போனதாகத் தட்டை மாற்றிப் போட்ட விந்தையை என்னவென்று சொல்ல? இது… இன்றைய ஆணாதிக்கம் காட்டும் மாயமல்லாமல் வெறென்ன?

( ராஜம் கிருஷ்ணன், பக். 47-52)

சீதை கதாபாத்திரத்தை பெண் மனநிலையில் இருந்து சரியாகவே சிந்திக்கிறார்கள்; சித்தரிக்கிறார்கள் பெண் படைப்பாளிகள்.

4.4. ‘பெண்ணியம்’ இரா.பிரேமா கூறுவது:

> சீதையின் ‘அக்கினிப் பிரவேசம்’ பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட மற்றொரு அநியாயமாகும். இதுவும் செய்யாத குற்றத்திற்கான தண்டனையாகும். பெண்களின் கற்பைச் சோதிப்பது என்பது தொடர்ந்து நடந்தால் பெண் சமூகத்தின் நிலை என்னவாகும். எனவே இக்கதை மீட்டுருவாக்கத்தில் ஒரு மனிதாபிமானத் தேடல் காணப்படுகிறது.
>
> (பேரா பிரேமா, ப.793)

4.5. ஒன்றுபட்ட பிரிட்டிஷ் இந்திய வங்கத்தில், 1829 இன் விதிமுறைகள் கீழாகத் தடை விதிக்கப்பட்டபோதிலும், ‘ஸதி’ (‘உடன்கட்டை ஏறுதல்’) என்னும் கொடிய மூடநம்பிக்கைச் சடங்கு இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை எதிரொலித்தது என்பதை நாம் மனதில் நிறுத்தவேண்டும்.

4.6. இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள தேவ்ராலா என்னும் கிராமத்தில்,

ரூப் கன்வர் என்னும் 18 வயதே நிரம்பிய இளம்பெண்ணின் 24 வயதுக் கணவன் மால்சிங் ஷெகாவத் முதல் நாள் இறந்துபோக, அடுத்த நாள் ஊரார் முன்னிலையில் ரூப் கன்வர் எரித்துக் கொல்லப்பட்டாள். இந்திய தேசிய ஊடகங்கள் இந்தக் கொடுமையை எதிர்த்து, வரிந்து கட்டிக் கொண்டு எழுதின. ( இந்தக் கட்டுரையாளர், தமது நண்பரான சூரிய நாராயணனுடன் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகச் செய்திகள், புகைப்படங்கள், ஓவியங்கள், மொழிபெயர்ப்புகள் கொண்டு தயாரித்த கண்காட்சி ஒன்றினை இந்திய சமூக விஞ்ஞானக் கழகம், சென்னை சார்பில் மாநகரத்தின் பல இடங்களில் வைக்க ஏற்பாடு செய்தார்.) உலகளாவிய அளவில் இந்தியாவின் நற்பெயர் கெட்டது.

இதன் விளைவாக, 1987 இல் இராஜஸ்தான் மாநிலத்தில் ‘ஸதி’ தடைச் சட்டம் அமலுக்கு வந்தது. 1988 இல் இந்திய ஒன்றிய அரசும் ‘ஸதி’ நிகழ்வுத் தடைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன்படி கணவன் இறந்த பிறகு, சிதையில் மனைவி தானாக முன்வந்தோ, அவள் விருப்பத்திற்கு மாறாக, வலுக்கட்டாயமாகத் தள்ளி விடப்பட்டோ எரிக்கப் படுவதும், ஸதிச் சடங்கைக் கொண்டாடுவதும், ஸதிச் செயலுக்காக பேரணிகள் மேற்கொள்வதும், எரிக்கப்பட்ட பெண்மணிக்குக் கோவில் எழுப்புவதும், கொண்டாடுவதும், அதற்கான அறக்கட்டளை தொடங்கி நடத்துவதும் சட்டப்படி குற்றமாகும் என்ற சட்டம் நாடெங்கும் அமலானது.

4. 7. புதுமைப்பித்தனின் ‘சாப விமோசனம்’ போன்று, சிறந்த பெண்ணியக் கதையாக சுசீலாவின் ‘புதிய பிரவேசங்கள்’ நிலைபெற்று நிற்கிறது. ( நவம்பர் 1988 ‘கலைமகள்’ இதழில் இந்தச் சிறுகதை வெளியானது; இதழின் ஆசிரியர் ‘வாகீச கலாநிதி கி.வா.ஜ.’ என்று அழைக்கப்படும் ஜகநாதன் 4 நவம்பர், 1988 இல் காலமானார்.)

**5. “ தேவந்தி” (வடக்கு வாசல், நவம்பர் 2007)**

5.1. சிலப்பதிகாரத்தில் காப்பியத் தலைவி கண்ணகி, தன் உற்ற தோழியான தேவந்தியிடம் மதுரையில் தனக்கு நிகழப்போகும் தீங்கை முன் அறிவிக்கும் தீய கனவைப் பகிர்ந்து கொள்கிறாள். கணவனைக் காக்கும் நோன்பு செய்யத் தவறியதால் தீங்கு விளைவானது என்றும், பூம்புகார் அருகிலுள்ள சோமகுண்டம் சூரிய குண்டம் ஆகிய பொய்கைகளில் மூழ்கி, காமவேள் கோட்டத்திலுள்ள காமவேளைப் பூசித்தால் இம்மையிலும் மறுமையிலும் கணவனைச் சேரும் பேறு பெறுவார்கள் என்று தேவந்தி கண்ணகியிடம் கூற, ‘அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழுவது எங்கள் இயல்பன்று’ என்று மறுத்த கதையை நாம் அறிவோம்.

தேவந்தியும் கண்ணகியைப் போலவே கணவனைப்பிரிந்திருப்பவள்தான்.

இந்தக் கதை எழுத்தாளர் சுசீலாவின் மனதில் மீட்டுருவாக்கம் பெறுகிறது. இதன் வழியாக, கணவனைப் பிரிந்து வாழும் பெண்களின் இருப்பு நிலை விளக்கமாகச் சித்தரிக்கப்பட்டு, புதிய சிந்தனை தூண்டும் வினாவுடன் அருமையாகப் பின்னப்பட்டுள்ளது.

5.2. “தேவந்தி” சிறுகதைத் தொகுப்பு அணிந்துரையில், எழுத்தாளர் பாவண்ணன் ( சுசீலா, ப.15)

> “ இச் சமூகத்தால் நிராசைக்குட்படுத்தப்பட்ட, நிலைகுலைய வைக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட பெண்களின் படிமமாக விளங்குகிறாள் தேவந்தி. இப்படிமத்தைக் கண்டெடுத்தது சுசீலாவின் மிகப்பெரிய சாதனை என்றே சொல்ல வேண்டும்.”

என்று குறிப்பிடுகிறார்.

5.3. தனது இனம் தெரியாத ஆபத்தை எதிர்கொள்ளும் கெட்ட கனவை தேவந்தியிடம் பகிரும் கண்ணகியிடம், அவளது அந்தப்புரச் சிறையை விட்டு வெளிவந்து கோயில் வழிபாடு, நோன்பு என்று மனதை ஆற்றிக் கொள்ளுமாறு தேவந்தி கூறுகிறாள்.

தனது அன்பின் வலிமையால் மாதவியிடமிருந்து கோவலன் தன்னிடம் திரும்பி வருவான் என்று நம்பிக்கை கொண்ட கண்ணகியிடம் ‘உன் அன்புக்கோ அல்லது நான் செய்து கொண்டிருக்கிற நோன்புக்கோ அந்த வலிமை நிச்சயம் இல்லையடி பைத்தியக்காரி!’ என்று கூறும் தேவந்தியிடம் தனது

வியப்பை வெளிப்படுத்துகிறாள் கண்ணகி. கலை மயக்கத்தில் கட்டுண்டு கிடக்கும் கோவலன் மீது நம்பிக்கை தனக்கு இருக்கும் நிலையில் 'தேவந்திக்கு ஏனிந்த விரக்தி?' என்று தேவந்தியிடமே வினவுகிறாள் கண்ணகி. 'இந்த நோன்பு கூட உலகின் கண் முன்னே அரங்கேறும் நாடகம்!' இறந்த குழந்தையின் உடலில் பாசண்டச் சாத்தன் புகுந்து உயிர்ப்பித்ததாக தனது மாமியாரால் புனையப்பட்ட கதையை, அவள் தன் மகனிடம் கூறி வளர்த்ததை நம்பி வளரும் அவள் கணவன், தன்னிடமும் இதை இறுதியாகப் பகிர்ந்த ரகசியத்தை கண்ணகியுடன் கூறுகிறாள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தனது மகனிடம் மாமியார் செய்த போதனை அவனை இல்லறத்திலிருந்து பிரித்து வைத்தது. உற்றார் உறவினரிடம் கணவன் நல்ல பெயர் எடுத்த போதிலும், தனது 'எட்டாண்டு இல்லறமும் பெருமையில்லை' என்று தனக்கு நேரிட்ட துயரத்தைக் கண்ணகியிடம் கூறுகிறாள்.

'மனிதக் கடமைகளில் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமை ஒன்று உண்டு. மனைவி என்ற மனித உயிருக்குள்ளும் தனியாக ஓர் இதயம் துடித்துக் கொண்டிருக்கிறது என்பது ஏன் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவதே இல்லை?...

இனி வரும் காலங்களிலும் வேறு ஏதோ ஒரு வடிவத்தில் இது தொடரத்தான் போகிறது! ஏதாவது ஒரு யுகத்தில் நான் அந்தக் கேள்விகளைக் கேட்காமல் விட்டு விடமாட்டேன்! … இந்த மாதிரியான மௌனங்கள் உடைபடும் தருணத்தை… நிச்சயம் நான் நிகழ்த்திக் காட்டத் தவற மாட்டேன் கண்ணகி!" என்று சூளுரைக்கிறாள் தேவந்தி.

தெரிந்த தொன்மத்தை கண்ணுக்குப் புலனாகாத தெரியாத சிந்தனை எழுப்பும் விவாதங்கள் வழி வெளிப்படுத்துகிறார் சுசீலா.

5.4. திருவருளால் சிவனிடம் மாங்கனிகளைப் பெற்ற கதையைத் தன் மனைவியிடம் கேட்கும் பரமதத்தன் அச்சத்துடன் மனைவியை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் நீங்கி, வேற்றிடம் சென்று இன்னொரு திருமணம் செய்து கொண்ட காரைக்கால் அம்மையார் தொன்மக் கதைக்கு ஈடான தொன்மக் கதை மீட்டுருவாக்கம் இது.

5.5. 'ஈடிபஸ்' உளவியல் கோட்பாட்டு அடிப்படையில் இக் கதையை மேலும் விரித்து நோக்கலாம். தன் மகனிடம் அதிக ஒட்டுதல் கொண்டுவிடும் மருமகளை மகனிடமிருந்து பிரிப்பதற்கு, கடந்த காலத்தின் நிகழ்வைச் சாதகமாக்கிக் கொள்கிறாள் மாமியார்க்காரி.

5.6. மொழியியல் அறிஞர் நோம் சாம்ஸ்கியின் 'இணக்கத்தை உருவாக்கும்' கோட்பாடு (Manufacturing Consent) ஆகவும் இதைக் காண இயலும். ஆணாதிக்கத்தை வலுப்படுத்த, ஆணாதிக்க சிந்தனையைப் பெண்களுக்குப் புகட்ட, பெண்களைப் பெண்களுக்கு எதிராக நிறுத்துதல் என்பதும் இங்கு நிகழ்த்தப் படுகிறது.

6. **பெண் எழுத்து வரன்முறைகள்**

- பெண் எழுத்தாளர் எழுத்து
- பெண்களின் பிரச்சினைகளைத் தன் பிரச்சினைகளாக அறிந்து எழுதும் பெண் எழுத்து
- தீவிரமான எழுத்து
- அந்தரங்கம் -பகிரங்கம் என்ற கருத்து நிலைப்பாடு
- பெண் மொழி, பெண் உடல் என்பனவற்றை இதனடிப்படையில் உருவாக்குதல்; பெண் தன் உடலால் அடிமைப்பட்டு நிற்கும் நிலையை எடுத்துரைத்தல்

- எழுத்துக் கூச்சமின்மை
- சமூகத்திற்கு அஞ்சி வாழ்ந்த வாழ்க்கை போதும். இனி "நான் எனக்காக, என் இனத்திற்காக, என் சகோதரிகளுக்காக வாழ வேண்டும்" என்ற உணர்வு மையமிட்டதான எழுத்து
- கண்ணீர்க் கதைகள், பாசாங்கு வார்த்தைகள், பகட்டு நடை தவிர்த்து கனத்த வார்த்தை வெளிப்பாட்டை உரக்கப் பேசுதல்
- ஆச்சர்யங்களைப் பேசாமல், அனுபவங்களைப் பேசுவது
- ஆணாதிக்கக்கூற்று வர்ணனை, காதல் மொழிகள் அமையாதது
- புராணக் கூறுகள், கதைகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும்; பெண்களைச் சிந்திக்கத் தூண்டும் விதத்தில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருக்கும்.
- சுய உயிரி-சுய இயக்கம்- சுய சிந்தனை- சுய உணர்வு-சுய அறிவு மிக்கவளாகப் பெண் மாந்தர்கள் படைக்கப் படுதல்

(இரா.பிரேமா, பக்.888-890)

-என்று பேராசிரியர் பிரேமா பட்டியலிடும் பெண் எழுத்து வரன்முறைக் கூறுகள் சுசீலாவின் மூன்று கதைகளிலும் இடம் பெறுகின்றன.

## 7. நிறைவுரை

7.1. இலக்கியத் தொன்மங்களை மறுவாசிப்பு செய்து உன்னதப் படிமங்கள் ஆக இலக்கியத்தில் நிலை நிறுத்துவது என்பது எம்.ஏ.சுசீலா அவர்களுக்குக் கை வந்திருக்கிறது.

7.2. பேராசிரியராகவும் படைப்பாளியாகவும் விளங்கும் எம். ஏ.சுசீலா அவர்களின் எழுத்துகள் குறித்த விவாதங்களும் மேலாய்வுகளும் உயர்கல்வி நிறுவனங்களில் தொடங்கப்பட்டு ஆவணங்களாகப் பதிவு செய்யப்படவேண்டும்.

**துணை நூற்பட்டியல்**


1. சுசீலா. எம்.ஏ. , தேவந்தி, வடக்கு வாசல் பதிப்பகம், 5A/11032, Second Floor Gali no 9, Sat Nagar Karol Bagh New Delhi 110005, முதல் பதிப்பு, ஜூலை 2011.
2. பிரேமா. இரா, பெண்ணியம்: அகலமும் ஆழமும், காவ்யா வெளியீடு, 16 இரண்டாம் குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம் கோடம்பாக்கம் சென்னை 600024, முதல் பதிப்பு, 2015.
3. ராஜம் கிருஷ்ணன், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ்ச் சாலை, எழும்பூர் சென்னை 600008, பதிப்பு 2019-20.